**28.15 ஊராட்சிகள்–மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல்– உயர்நிலைக்குழு பரிந்துரைகள்'' சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்'' என்ற தலைப்பில் அரசு ஏற்றுக் கொண்டவை மீது ஆணை வெளியிடப்படுகிறது**

---

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண்.104. நாள் : 22.6.1999.

படிக்க :

அரசு ஆணை( நிலை) எண். 297, ஊரக வளர்ச்சித் துறை, நாள்– 29.9.97.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராக கொண்டு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 3.5.1999 மற்றும் 4.5.1999 ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் பரிசீலிக்கப்பட்டன.

2. கிராம ஊராட்சிகள் தங்கள் பகுதிகளில் உள்ளாட்சி அமைப்பு மற்றும் தனியார் அங்காடிகளை புதிதாக ஏற்படுத்த இடங்களை தேர்வு செய்யவும் மற்றும் அங்காடிகளை நடத்தவும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவுகள் 147 மற்றும் 148–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் தங்களுக்கு சொந்தமான அங்காடிக் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சிகளிடமே தற்போது உள்ளது. கடைகள், அங்காடிகள்,திருவிழாக்கடைகள், திருவிழாக்கள் நடத்துவது போன்றவற்றிற்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குவதற்கும், மற்றும் கட்டணங்களை நிர்ணயித்து அதனை முறையாக வசூலிப்பதற்கும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 111–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சி அளவில் நடைபெறும் சமுதாய விழாக்கள்–வழிபாடுகள் சார்ந்த திருவிழாக்களின் போது சுத்தம் மற்றும் சுகாதாரம் முறையாக பேணுதல் குறித்து தேவையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராம ஊராட்சிகளின் கடமைகளில் ஒன்றாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தினசரி மற்றும் வாரச் சந்தைகளை ஏற்படுத்தவும் அவைகள் செயல்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கவும், அதே சமயத்தில் தினசரி மற்றும் வாரச்சந்தைகளுக்கான உரிமங்களை வழங்கி, வரி வசூல் செய்யவும் இவ்வாறு அமைக்கப்படும் அங்காடிகளை பராமரிக்கவும். இவை தவிர அங்காடிகளால் சுற்றுப்புற சூழல் மாசுபடாமலும், மனித சுகாதாரத்திற்குக் கேடுகள் விளையாமலும் அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்டவும் தேவையான நடவடி,ககைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்க ஊராட்சிகள் சட்டம் பிரிவுகள் 147 மற்றும் 148–ல் ஏற்கனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இயங்கும் தினசரி மற்றும் வார அங்காடிகளை இனங்கண்டு, அவற்றை ஊராட்சி ஒன்றிய சிறப்பு அங்காடிகளாக அறிவித்து, அவற்றின் மேம்பாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 152–ல் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

3. உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல் 111 22. சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளபடி கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு இணைப்புகள் 1–ல் கண்டவாறு கூடுதல் அதிகாரங்கள் வழங்கி அரசு ஆணையிடுகிறது. மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள் இணைப்பு '2'–ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. இவ்வாணையையும் இதன் கூடிய இணைப்புகளையும் அனைத்து கிராம ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டு செல்லுமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

### இணைப்பு–1

சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் குறித்த மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அதிகாரங்கள்

**கிராம ஊராட்சிகள் :**

1. சந்தைகள், அங்காடிகள் போன்றவற்றை முறைப்படுத்தவும் மற்றும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், வரையறைகளை மீறி நடப்போர் இருப்பின், அளித்த உரிமத்தை ரத்து செய்தல், மேலும் சட்ட மீறல்கள் இருப்பின் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான நடவடிக்கைகளை கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள் :**

1. கிராமப்புறங்களிலுள்ள அங்காடிகள் மற்றும் சந்தைகள் சிறப்புற இயங்க கிராம ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவி செய்யலாம்.

2. கிராம ஊராட்சிகள் நடத்தப்படும் திருவிழாக்கள் போது சுகாதாரம் சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளிலும் ஊராட்சி ஒன்றியங்கள் உதவி செய்யலாம்.

**மாவட்ட ஊராட்சிகள் :**

1. வருமானம் ஈட்டக் கூடிய வகையில் மாவட்டத்தில் முக்கியப் பகுதிகளில் அங்காடி வளாகங்கள் கட்டுவதற்குரிய திட்டமிடல், கட்டடங்களைக் கட்டி, வாடகைக்கு விடுதல், அவற்றைப் பராமரித்தல் போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகள் செய்யலாம். மேலும் இவ்வாறு நிர்வகிக்கப்படும் அங்காடிகளுக்கான வரி மற்றும் வாடகை வசூல் செய்யவும் வரி/வாடகை செலுத்தத் தவறியவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

2. மாவட்டப் பகுதிகளில், நலிவடைந்த அங்காடிகள் மற்றும் பெரிய சந்தைகளை திறம்பட செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

3. சந்தைகள் மற்றும் சிறப்பு அங்காடி வளாகங்களை மாவட்டத்தின் சிறப்பு இனங்களாக குறிப்பிட்டு அறிவிக்க அரசுக்கு மாவட்ட ஊராட்சிகள் உதவலாம்.

### இணைப்பு–2

மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கும் கூடுதல் பொறுப்புகள்.

ஊரக வளர்ச்சித் துறை (சந்தைகள் மற்றும் கண்காட்சிகள்)

1. பொது அங்காடிகள் மற்றி உதவி இயக்குநருடன் (ஊராட்சிகள்) அறிவுரை வழங்கவும் மற்றும் ஆய்வும் செய்யலாம்.

2. தனியார் அங்காடிகள் பற்றி உதவி இயக்குநருடன் (ஊராட்சிகள்) அறிவுரை வழங்கவும் மற்றும் ஆய்வும் செய்யலாம்.

3. தொடக்க கூட்டுறவு அங்காடிகள் பற்றி இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் அவர்களுடன் அறிவுரை வழங்கி ஆய்வு செய்யலாம்.

4. ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் பற்றி மாவட்ட ஒழுங்கு முறை விற்பனைக் கூட அலுவலருக்கு அறிவுரை வழங்கலாம்.

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்